யா / கோப்பாய் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் திரு. க. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும். இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக மருதனார்மடம் மேலதிக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா அவர்கள் கலந்து கொள்வார்.

ராக்கிங் மரண விவகாரம்

## மாணவர்களுக்கு பிணை வழங்க நீதிபதி மறுப்பு

புதிய மாணவர் ஒருவரின் கொலைக்குக் காரணமாயிருந்த ராக்கிங் சம்பவத்தில் ஈடுபட்டதாகச் சந்தேகப்படும் 34 அங்கண்ணுகோலா மிலச விவசாயக் கல்லூரி மாணவர்களைப் பிணையில் விடுவிக்க ஹம்பாந்தோட்ட மாவட்ட நீதிபதி சந்திரா ஜெயதிலக்கா மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பிரியங்கா திரோஷன் புஞ்சிஹேவ (வயது 20) என்ற மாணவனை இவர்கள் ராக்கிங் செய்து கொலைக்குற்றம் புரிந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். திரோஷன்மே முதலாம்திகதி காலமானார்.

எதிரிதரப்புச் சட்டத்தரணிகள் பிணையில் விடுவிக்க அனுமதி கோரியபோது விசாரணை முடியவில்லை என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டபோது பிணையில் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது

சந்தேக நபர்களை ஜூலை 8 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

### நகை திருட்டு பிடிபட்டது

[தென்மராட்சி]

முகமாலை இந்திராபுரம் பகுதியைச் சேர்ந்த சி. செல்லமுத்து என்பவர் தனது வீட்டிலிருந்து திருடப்பட்டதாக கூறிய ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியுடைய நகைகள் பளை காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, கடந்த 19ஆம் திகதியன்று இரவு வேளையில் தங்க நகைகளை பொட்டளியாகக் கட்டி

## கொழும்பில் வதியும் தமிழர் வாக்காளராகுவதில் சிரமம்

(கொழும்பு)

கொழும்பில் வாழும் தமிழர்கள் தேர்தல் இடாப்புகளில் தமது பெயர்களை மீண்டும் பதிவு செய்து கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு பகுதியில் தங்கியிருக்கும் தமிழர்கள் தேர்தல்களுக்கான வாக்காளர் இடாப்புகளில் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள எடுக்கும் முயற்சிகளுக்கு கிராம சேவையாளர்கள் பலரும் முட்டுக்கட்டை போட்டு வருவதாகவும், இதனால் தேர்தல் இடாப்புகளில் பெயர் பதிவு செய்வதில் தமிழர்கள் சிரமப்படுவதாகவும் மேலும் தெரியவருகின்றது.

## சித்த ஆயுர்வேதக் கல்லூரி மாகாணசபைப் பொறுப்பில்

[யாழ்ப்பாணம்]

வட இலங்கை லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை ஜூலை முதலாம் திகதி முதல்வடக்கு-கிழக்கு மாகாண சபை பொறுப்பேற்கவுள்ளது.

1925ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வரும் இக்கல்லூரி அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு அமைவாகவே வடக்கு-கிழக்கு மாகாணசபையினால் பொறுப்பேற்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் இக் கல்லூரியில் கடமையாற்றும் சகலருக்கும் மாதாந்த வேதனம் வடக்கு, கிழக்கு மாகாண சபையால் வழங்கப்பட இருப்பதுடன், நான்கு லட்சம் ரூபா வரையில் கல்லூரியினதும், சித்த வைத்தியத்துறையினதும் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படவுள்ளது.

கைதிகள் விடுதலை தொடர்பாக கண்டுகொள்ளப்பட்ட உடன்பாட்டின்படி. தமிழ் மக்களின் தேவைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் தடைநீக்கம் செய்யப்பட்ட பொருள்களை அனுப்பி வையுங்கள் என்பதே அதுவாகும். அதுவும் நீண்ட காலத்திற்குத் தேவையான அளவல்ல. ஒரு மாதத்திற்குத் தேவையான பொருள்கள் மட்டுமே. அதிலும், விநியோகம் சீராக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என உறுதிப்படுத்தப்பட்டால் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆகையால், சிறிலங்கா அரசாங்கம் கூறுவது போன்று இதில் புதிய நிபந்தனை என்பது எதுவுமில்லை. இது உடன்பாட்டை ஓரளவேனும் நிறைவேற்ற முயற்சிகள்என்பதே ஆகும். மேலும் கைதிகள் விடுதலையை விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பண்டமாற்று உடன்பாடாக கருதவில்லை. ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இதனை மிகவும் குறுகியநோக்கில் அணுகியுள்ளது போன்றே அதன் நடவடிக்கைகள் உள்ளன. கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்காக ஒரு சிறுதொகை பொருளைக் கொடுத்து கைதிகள் விடுதலையான பின் உடன்பாட்டை கைவிட்டுவிடலாம் என எண்ணியுள்ளது போன்றே தெரிகின்றது.

அவ்வாறு இல்லாவிட்டால், அதாவது பொருளாதாரத் தடையில் தளர்ச்சியை உடன்பாட்டின்படி அரசு நிரந்தரமாக கடைப்பிடிப்பதாய் இருப்பின் புலிகள் கோரிய பொருள்களை அனுப்பிவைப்பதில் ஏன் அரசு தயக்கம் காட்ட வேண்டும். அதனை புதிய நிபந்தனை என்று ஏன் உடன்பாட்டை முறித்துக்கொள்ள முற்பட வேண்டும்?

மேலும், சிறிலங்கா அரசாங்கத்திடம் உங்கள் வாக்குறுதியை நீங்கள் நிறைவேற்றுங்கள், நாங்கள் எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுகிறோம் என விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்ததில் தவறு என்ன இருக்கின்றது? சிங்கள அரசாங்கம் கடந்த காலத்தில் தமிழர் தொடர்பான விடயத்தில் நடந்து கொண்ட முறையை எண்ணிப்பார்ப்பவர்கள் எவரும் இவ்வாறானதொரு கோரிக்கையையே விடுவர். ஏனெனில் நம்பிக்கையின் அடிப்படையில் செயற்படக்கூடிய விதத்தில் சிங்கள அரசாங்கங்கள் வரலாற்றில் என்றும் செயற்பட்டதாக இல்லை,

உண்மையில் உடன்பாட்டைச் செய்து கொண்ட சிறிலங்கா அரசாங்கம் வழமை போலவே ஒரு பகுதியினர் அதனை எதிர்த்தும், அதனைக் கைவிடவும், குழப்பவும் முற்பட்டுள்ளது. அன்று பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தங்களை ஒருபகுதி அரசியல்வாதிகள் எதிர்த்தார்கள். சிங்கள அரசுகள் கைவிட்டன. இன்று புலிகளுடனான உடன்பாட்டை இராணுவத்தில் ஒரு பகுதியினர் எதிர்ப்பதால் அரசாங்கம் குழப்பியடிக்க முடிவு செய்துள்ளது. ஆனால், அன்றும் இன்றும் ஒரு வித்தியாசம். அன்று தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள், இன்று தமிழர்கள் ஏமாறத் தயாராக இல்லை.

ஆனால், இந்த உடன்பாட்டை அரசாங்கம் குழப்பியடிப்பதென்பது தனியாக கைதிகள் தொடர்பான விடயத்தை மட்டும் குழப்புவதாக இருக்கப் போவதில்லை. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்று ஏற்படக்கூடிய விதத்தில் உருவாகி வந்த ஒரு நல்லெண்ண சூழ்நிலையையே அரசாங்கம் குழப்பி அடித்ததாகவே முடியும். அதாவது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை அரசாங்கம் விரும்பவில்லை என்பதையே இது வெளிக்காட்டுவதாகும்.

---

...மிய தேசிய முன்னணியின் தலைவருமான காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் கூறு...

...வால் வசிப்பதற்கு மிகவும் ஆபத்தான இடமாக கொழும்பு மாறிவிடும் என்றும் எச்சரித்தார்.

# வீரகுமார் நடவடிக்கை சி.ஐ.டி: குழப்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவை கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் குலவீரசிங்கம் வீரகுமார் சட்டவிரோதமான வழிமுறை மூலம் மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றது ஏன் என்பதும், படுகொலை நடப்பதற்கு ஒருநாளுக்கு முன்பாக அதாவது ஏப்ரல் 30-ம் திகதியன்றே தனது கடன்களை செலுத்தியது ஏன் என்பதும் குறித்து விசாரணை நடத்தி வரும் சி.ஐ.டியினர் குழப்பமடைந்து உள்ளனராம்.

மோட்டார்சைக்கிள் வாகன பயிற்சி அளிக்கும் நிறுவனம் ஒன்றின் ஏஜெண்ட் ஒருவரை அணுகி தனக்கு மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் எடுத்துத் தரும்படி கோரிய வீரகுமார் இதற்கென ரூபா 800ஐ அந்த ஏஜெண்டிடம் கொடுத்துள்ளார். பின்னர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் இருவருடன் சென்ற வீரகுமார் எந்தவித பரிசோதனைக்கும் உள்ளாக்கப்படாமலேயே அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

இதுபோலவே வாழைத் தோட்டப் பகுதியிலுள்ள கடையொன்றில் தவணையிட்ட காசோலைக்கு பொருள்களை பெற்றுக் கொண்டிருந்த வீரகுமார் சம்பவத்திற்கு முந்திய தினம் பணத்தைக் கொடுத்து காசோலையை மீளப் பெற்றுள்ளார்.

## பரீட்சை

குடிசன மதிப்பு, புள்ளிவிபர திணைக்களம் நடத்தும் புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு ஆட்களை திரட்டுவதற்கான பொதுப் பரீட்சை யூலை 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பரீட்சைக்கு விண்ணப்பித்தோரில் தகுதி உடைய அனைவருக்கும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது

---

செய்து கொலைக்குற்றம் புரிந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். நீரோஷன்மே முதலாம்திகதி காலமானார். எதிரிதரப்புச் சட்டத்தரணி

## நகை திருட்டு பிடிபட்டது

[தென்மராட்சி]

மூகமாலை இந்திராபுரம் பகுதியைச் சேர்ந்த சி. செல்லமுத்து என்பவர் தனது வீட்டிலிருந்து திருடப்பட்டதாக கூறிய ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியுடைய நகைகள்பளை காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த 19ஆம் திகதியன்று இரவு வேளையில் தங்க நகைகளை பொட்டளியாகக் கட்டி தலையணையின் கீழ் வைத்துப் படுத்திருந்ததாகவும் அச்சமயம் அவை திருடப்பட்டதாகவும் புகார் செய்திருந்தார். இப்புகார் தொடர்பாக விசாரணை நடத்திய காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் பெண்மணி ஒருவரிடம் விசாரணை நடத்திய போது திருட்டு அம்பலமானது. இவர் தற்போது காவல்துறையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். [86]

---

(கொழும்பு)

கொழும்பில் வாழும் தமிழர்கள் தேர்தல் இடாப்புகளில் தமது பெயர்களை மீண்டும் பதிவு செய்து கொள்வதில் பெரும்சிரமங்களை எதிர்நோக்குவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு பகுதியில் தங்கியிருக்கும் தமிழர்கள் தேர்தல்களுக்கான வாக்காளர் இடாப்புகளில் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள எடுக்கும் முயற்சிகளுக்கு கிராம சேவையாளர்கள் பலரும் முட்டுக்கட்டை போட்டு வருவதாகவும், இதனால் தேர்தல் இடாப்புகளில் பெயர் பதிவு செய்வதில் தமிழர்கள் சிரமப்படுவதாகவும் மேலும் தெரியவருகின்றது.

# சித்த ஆயுர்வேதக் கல்லூரி மாகாணசபைப் பொறுப்பில்

[யாழ்ப்பாணம்]

வட இலங்கை லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை ஜூலை முதலாம் திகதி முதல்வடக்கு-கிழக்கு மாகாண சபை பொறுப்பேற்கவுள்ளது.

1925ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வரும் இக்கல்லூரி அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு அமைவாகவடக்குகிழக்குமாகாணசபையினால் பொறுப்பேற்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் இக் கல்லூரியில் கடமையாற்றும் சகலருக்கும் மாதாந்த வேதனம் வடக்கு கிழக்கு மாகாண சபையால் வழங்கப்பட இருப்பதுடன், நான்கு லட்சம் ரூபா வரையில் கல்லூரியினதும், சித்த வைத்தியத்துறையினதும் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படவுள்ளது.

# குழந்தைகள் விபச்சாரத்தில் சிறிலங்கா 3-வது இடம்

குழந்தைகள் விபச்சாரத்திலும், குழந்தைகள் பாலியல் படங்களை வெளியிடுவதிலும் மூன்றாம் உலக நாடுகளில் சிறிலங்கா மூன்றாவது இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து மற்றும் பிலிப்பயின்ஸுக்கு அடுத்த நிலையில் சிறிலங்கா உள்ளதாக சுவிடிஷ் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பான றெட் பாணாவின் ஆய்வாளர் திருமதி ஹெலனா கார்லின் கொழும்பில் செயலமர்வொன்றில் தெரிவித்தார். இந்தஒழுக்கக்கேடு வளருமாயின் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

குழந்தைகள் விபச்சாரத்தை நடத்துபவர்களையும், பாலியல் படம் எடுப்பவர்களையும் எமக்குத் தெரியும். சில தனியார் ஹொட்டல்கள், விருந்தினர் விடுதிகள், வீடுகள் ஆகியவற்றில் இந்தப் பாலியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. படங்களை ஐரோப்பிய நாடுகளில் சந்தைப்படுத்துபவர்களையும் எமக்கு நன்கு தெரியும். 'வெள்ளைத் தோல்'களைக் கைது செய்ய வேண்டாம் என்று சிறிலங்கா பொலிஸாருக்குப் பணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சூழல் மற்றும் சிறுவர்களை எங்கும் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் திருமதி மொறீன் செனிவரெட்ன தெரிவித்தார்.

இந்தத் தொழிலில் சுமார் 50 பேர் ஈடுபட்டுள்ளதாக சுற்றுலாப் பயணிகள் வழிகாட்டி அமைப்பின் தலைவர் பேட்டி பாலசூரியா கூறினார்.

பாலியல் ரீதியாகச் சுரண்டப்படும் குழந்தைகள் சிறிலங்காவில் 2000க்கும் 10,000க்கும் இடையிலும், பிலிப்பைன் சிவில் 25,000 முதல் 40,000 வரையிலும், தாய்லாந்தில் 2 00,000 முதல் 4,00,000 வரையிலும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவில் 6 முதல் 14 வயதுக்குட்பட்டவர்களே பாலியல் ரீதியாகச் சுரண்டப்படுகிறார்கள் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

---

# சந்தை விலை விபரம் (28-06-1993)

## யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 30.00 | 29.35 | 29.00 | 28.30 | [illegible] | 28.50 | 29.00 | 31.00 |
| 02. | கோதுமை மா | ,, | 13.00 | 12.50 | 12.65 | 12.85 | 13.00 | 13.00 | 13.30 | 13.00 |
| 03. | சீனி | ,, | 39.00 | 38.30 | 38.00 | 39.00 | 40.00 | 38.00 | 42 65 | 40.65 |
| 04. | கத்தரி | ,, | 12.00 | 23.30 | 11.30 | 16.65 | 10.65 | 16.30 | 20.65 | 16.00 |
| 05. | வெண்டி | ,, | 24.65 | 31.65 | 20.00 | 25.00 | 19.30 | 24.00 | 30.65 | 40.00 |
| 06. | பாகல் | ,, | 27.65 | 36.30 | 30.00 | 46.65 | 40.00 | 35.00 | 35.00 | 29.00 |
| 07. | புடோல் | ,, | 20.65 | 23.00 | 16.00 | 22.00 | 20.00 | 18.00 | 21.30 | — |
| 08. | பயற்றங்காய் | ,, | 22.30 | 34.65 | 25 00 | 35.30 | 39 30 | 22.65 | 24.65 | 16.30 |
| 09. | தக்காளி | ,, | — | — | — | — | 60.00 | — | — | — |
| 10. | வாழைக்காய் | ,, | 31.00 | 40.00 | 36.75 | 46.30 | 40.00 | 40.00 | 38 30 | 39.00 |
| 11. | பீற்றூட் | ,, | 31.00 | 26.65 | 22.00 | 23.00 | — | 26.30 | 28.65 | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 14.80 | 16.30 | 13.00 | 13.50 | 14.00 | 14.30 | 14.80 | 10.30 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 73.30 | 89.30 | 71.65 | 80 00 | 85.00 | 60.00 | 56.65 | 60.00 |
| 14. | எலுமிச்சை | ,, | 115.00 | 113.30 | 113.30 | 90.00 | 90.00 | 90.00 | 90.00 | 111.65 |
| 15. | வெங்காயம் | ,, | 17.50 | 21.30 | 16.00 | 15.30 | 16.75 | 15.50 | 19.15 | 17.50 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 32.50 | 35.65 | 40.00 | 41.00 | 35.00 | 40.00 | 32.50 | — |
| 17. | இறால் | ,, | 110.00 | 110.00 | 90.00 | 101 65 | 100.00 | — | 80.00 | 63.00 |
| 18. | பெரியமீன் | ,, | 170.00 | 170.00 | 180.00 | 150.00 | 150.00 | 215.00 | 110.00 | 61.65 |
| 19. | சிறியமீன் | ,, | 160.00 | 120.00 | 80.00 | 50.00 | 90.00 | — | 45.00 | 50 00 |
| 20. | முட்டை | ஒன்று | 07.50 | 08.30 | 08.00 | 08.40 | 08.00 | 08.50 | 08.65 | 06.25 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

# மேலும் ஆறு 'புக்காரா'க்கள் கொள்வனவு செய்ய முயற்சி

புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட புக்காரா விமானங்களின் விமானிகள் இருக்கைப் பகுதியும், எரிபொருள் தாங்கிப் பகுதியும் கவசமிடப்பட்டுள்ளதால் விமானிகள் விமானத்தை தாழப் பறக்கச் செய்து தாக்குதலை நடத்த முடிகிறது என விமானப்படை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

புக்காரா விமானங்களில் பறக்கும் பயிற்சிகள் அநுராதபுர விமானத்தளத்தில் நடைபெற்று வருகிறது. நான்கு புக்காரா விமானங்களும் அநுராதபுர தளத்திலேயே நிலை கொண்டுள்ளன. இந்த நான்கு புக்காராக்களுக்குமேலதிகமாக மேலும் ஆறு விமானங்களை ஆர்ஜன்டீனாவில் பெற்றுக் கொள்ள விமானப்படையின் புதிய தாக்குதல்பிரிவு திட்டமிட்டுவருகிறது என கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

20 எம் எம். பீரங்கிகளையும் விமானத்தின் மூக்குப் பகுதியில் அமைந்த ஆறு இயந்திரத் துப்பாக்கிகளையும் கொண்ட புக்காரா விமானம் 20 நிமிடங்களில் அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்தைச் சென்றடையுமென விமானப்படையின் பயிற்சி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நாம் முழுமையாக நம்பியிருக்கும் தாக்குதல் விமானங்கள் இவைதான் என அவர் கூறினார்.

குண்டுகள், ரொக்கட்டுக்கள், ஏவுகணைகள், ரேபிடோக்கள் என 1500 கிலோ நிறையுடைய ஆயுதங்களை இவ்விமானம் சுமந்துசெல்லும் எனவும் நாலரை மணிநேரம் இவ்விமானம் தொடர்ந்து பறக்கக்கூடியது என்றும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

நாம் ஒரு தாக்குதலைத் திட்டமிட முன் விமானிகள் வான்மூலமாக தரை நிலை அமைப்பை அவதானிப்பர். இலக்கிற்கு ஏற்ப பொருத்தமான ஆயுதம் புக்காராவில் எடுத்துச் செல்லப்பட்டு அந்த இலக்கு தாக்கப்படும் என எயர் கொமடோர் அன்சிலீம் பீரிஸ் விளக்கமளித்தார். இவ்விமானத்தை எதிர்க்க தற்போதைய ஆயுதங்களை விட தாக்குதல் திறன் கூடிய ஆயுதங்களை அல்லது தரையில் விண்ணுக்குப்பாயும் ஏவுகணைகளைப்பெற்றுக்கொள்ளப் புலிகள் இப்போது முற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் இப்போது விமானப் படையின் விமானங்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக கூறிய விமானப் படையின் கட்டளை அதிகாரியொருவர் இரண்டாவது ஈழப் போர் ஆரம்பத்தில் கடும் விமானிகள் பற்றாக் குறையினால் சிலவிமானிகள் மாதம் 70 முதல் 100 மணித்தியாலங்கள் பறக்க வேண்டியிருந்தது. இப்போது விமானி ஒருவர் சராசரி மாதம் 40 மணிநேரம் பறக்க வேண்டியிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு முன்னைய சியாமாசெட்டி விமானத்தின் தாக்குதல் திறன் முழுவதும் தெரிந்துள்ளது அதற்கேற்ப அவர்கள் முன் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் செய்திருந்தனர் எனினும் புக்காரா குறித்து அவர்கள் இன்னமும் தெளிவில்லாமல் உள்ளனர் என விமானப் படை விமானி ஒருவர் குறிப்பிட்டார்.

## 'புக்காரா' களஞ்சியம்

[கொழும்பு]

சிறிலங்காவிற்கு விற்கப்பட்ட புக்காரா விமானங்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களை வழங்க உதிரிப்பாக களஞ்சியம் ஒன்றை ஆர்ஜன்டீனா சிறிலங்காவில் நிறுவலாம் என சிறிலங்கா விமானப் படை அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதன்மூலம் புக்காராவைத் தொடர்ந்து இந்த நிறுவனம் புதிதாக தயாரிக்கவுள்ள பம்பா எனும் ஜெட்விமானத்திற்கு ஆசியா பிரதேசத்தில் பெரும் சந்தைவாய்ப்பை

## உதிரிப்பாக கொழும்பில்?

பெற்றுக்கொள்ளலாம் என மேற்படி நிறுவனம் திட்டமிட்டுள்ளதாம்.

---


**யாழ். மத்தியில் ஊடுருவல் ...**

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா

வாடிக்கையாளரின் நலன்கருதி

408, ஆஸ்பத்திரி வீதி,

சண்டோஸ் மதுபானச்சாலையில்

(பழைய பஸ் நிலைய முன்பாக)

எமது தரமான, சுவையான,

உணவுப் பார்சல்களை

காலை 11-45 முதல் பி. ப. 3-30 மணிவரை

பெற்றுக் கொள்ளலாம்.

என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

மரக்கறி ரூபா 25/-

மீன்/இறைச்சி ரூபா 30/-

ஜோ. எகட்டனின் **ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை

சுண்டுக்குளி.

ஜெசித்தாரா புதுயுகத்தில் ஓர் புது உருவம்

விளம்பர வடிவமைப்பு

(சி-6897) செனித்


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

---

## வீரவணக்க கூட்டம்

(அரியாலை)

6 ஆம் மாதங்களில் (ஜூன் மாதம்) வீரச்சாவடைந்த வடமராட்சிக் கோட்டத்தின் உடுப்பிட்டி வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8 00 மணிக்கு மேஜர் சலம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இவ் வீரவணக்கக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் நினைவுப் பேருரைகளும், இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (90)

## சங்கக் கிளை இடமாற்றம்

(கொழும்புத்துறை)

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் யாழ் வண்ணார்பண்ணைக் கிளை காங்கேசன் துறை வீதியில் உள்ள சிவலிங்கப்புளியடி எம். ஜி எம். பாய்க் கட்டடத்துக்கு அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (24)

## கரும்புலிகள் நாள் பாரம்பரிய விளையாட்டு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும் கரும்புலிகள் நாளையொட்டிய அரங்கப்போட்டியின் யாழ் மாவட்டத்துக்கான இறுதித்தெரிவு ஜூலை 3ஆம், 4ஆம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரங்க நிகழ்ச்சிகள் யாவும் 03 - 07 - 1993 காலை 10 00 மணிக்கு மேற்குறிப்பிட்ட மண்டபத்தில் பதிவுசெய்யப்பட்டு அதற்கான சுட்டிலக்கம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். குறித்த நேரத்தில் பதிவு செய்யப்படாத நிகழ்ச்சிகள் யாவும் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டாது.

### சிலம்படி போர்த்தேங்காய் அடித்தல்

எமது பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் சிலம்படியும், போர்த்தேங்காய் அடித்தலும் 01 - 07 - 1993 அன்று பிற்பகல் 3 00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. போர்த்தேங்காய் அடித்தல் மரபுக்கமைவாக நின்றவாறும் இருந்தவாறும் அமையும். இப்போட்டியில் பங்குபற்றுவோர் ஒருவர் 25 தேங்காய்கள் என்ற எண்ணிக்கைப்படி கொண்டு வருதல் வேண்டும். இவர்கள் 01-07-1993 3-00 மணிக்கு நீர்வேலி அத்தியார், இந்துக்கல்லூரி மைதானத்தில் சமுகங்கொடுத்தல் வேண்டும்.

## "நாடக விழா"

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மாபெரும் 'நாடக விழா' ஒன்று ஜூலை மாதம் முதலாம் திகதி வியாழக் கிழமையும், இரண்டாம் திகதி வெள்ளிக் கிழமையும் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. சி. கேசவராஜன் தலைமையில் இவ் விழா இரவு 6.30 மணி முதல் நடைபெறும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

# சிறையிலுள்ள தமிழ் கைதிகளை இனம்காண நடவடிக்கை

## கைதிப்பரிமாற்ற முயற்சியாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 31 யுத்தக் கைதிகளுக்கும் பதிலாக பரிமாற்றம் செய்யப்படக்கூடியதாக தென்னிலங்கைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை இனம்காணும் நடவடிக்கையில் சட்டமா அதிபர் திணைக்களம் ஈடுபட்டு வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னர் இவ்வாறு பரிமாற்றம் செய்யப்படக்கூடிய 60 தமிழ்க் கைதிகளின் பெயர்கள் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் ஆனால் அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கைதிகள் தொடர்பாக புலிகள் திருப்தி கொள்ளவில்லை எனவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சிறிலங்கா பாதுகாப்புஅமைச்சு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்கிய ஆலோசனைக்கு ஏற்ப தென்னிலங்கை தடுப்பு முகாம்களில் சந்தேகத்தின் பேரில் ... டுள்ள கைதிகளின் பின்னணி குறித்து கடந்த வியாழன் முதல் ஆராயப்பட்டுவருவதாகவும் விசாரணை செய்யப்படாமல் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளில் எவர்களை விடுதலை செய்ய முடியும் என்பது குறித்தும் எவர் மீது குற்றச்சாட்டுகளுக்கேற்ப வழக்குத் தொடரலாம் என்பது குறித்தும் இப்போது ஆராயப்பட்டு வருவதாகவும், இது தொடர்பான விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் அச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

---

ஒன்பது

...றுள்ளனர்.

மீதமுள்ள 50பேரில் நாளை ஒன்பதுபேர் திரும்புகின்றனர். இவர்களில் இருவர் விடுதலையாகிச் செல்லும் நோயுற்ற பொலிசாரின் பெற்றோர்கள் ஆகும். மிகுதி ஏழுபேரும் காவலிலுள்ள பொலிசாரின் உறவினர்களாகும்.

---

வலிவடக்குப்

...நிலைகளிலிருந்து ஐம்பது கலிபர் தாக்குதலும் நடாத்தப்பட்டது. இதனால் சேதமெதுவும் எற்பட்டதாக தெரியவரவில்லை.

இதேவேளை நேற்று அதிகாலையிலிருந்து சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தியொன்று வலி-வடக்கின் இராணுவ நிலைகளை அண்டிய பகுதிகள்மீது பல தடவை நோட்டமிட்டுச்சென்றது. இதேவேளை நேற்று ...

---

குடும்பத்

...பெறப்படும் வட்டிப் பணத்திலிருந்தே மேற்படி புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. குடும்பத்தின மூல உழைப்பாளியை இழந்து பரிதவிக்கும் ஏழைத் தமிழ்மாணவர்களுக்கு அவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தாமல் தொடருவதற்காகவே இவ் உதவி வழங்கப்படவுள்ளது.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஸ்தாபகர் அமரர் கே. கந்தசாமி சிட்னி. தமிழ் மனித உரிமைகள் கழகத்தின் ஸ்தாபகரும் அவுஸ்திரேலியா இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஆரம்பகால உறுப்பினருமான அமரர் டாக்டர் இராசநாயகம் ஆகியோரின் ஞாபகார்த்தமாகவே இந்த புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

---

ஐ. நா.

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் சமர்ப்பித்த யோசனைகளில் உள்ள சிக்கலான அம்சங்கள் குறித்து புலிகளின் பிரதிநிதிகள் ஐ. நா. பிரதிநிதிகளுக்கு விளக்கினர். புலிகளின்யோசனை அடங்கிய அதிகாரபூர்வ அறிக்கை அடுத்த வாரம் ஐ நா. அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாளை காலை ஐ. நா. அதிகாரிகள் புலிகளின் பாதுகாப்புடன் கேரதீவுபாதையையும் பார்வையிடுவர்.

---

வடமராட்சி

...கொள்ளப்பட்டன.

இதேவேளை வடமராட்சிக் கடற்பகுதியிலும் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையும் காணப்பட்டது. (யோ.

---

கிளாலி

...தனர்.

மேற்படி தாக்குதல் சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதலினால் கடற்படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

இம் மோதல் இடம்பெற்ற வேளை பூநகரி, மற்றும் ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்து கிளாலி கரையோரப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)(86)

---

பதுங்கியிருந்து

...ந்து வந்துகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

லெப்டினன்ட் நிசார்/அமுதப்பிரியன் (சதாசிவம் விஸ்வலிங்கம், இக்கோடை மட்டக்களப்பு) எனும் போராளியே இதில் வீரச்சாவு அடைந்தவராவார்.

இவ்இரு போராளிகளுக்கும் ஆதரவாளருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

மரக்கறி ரூபா 25/-
மீன்/இறைச்சி ரூபா 30/-

ஜோ. எகட்டனின் **ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

ஜெசித்தாரா புதுயுகத்தில் ஓர் புது உருவம்

(சி-6897)

விளம்பர வடிவமைப்பு
செனித்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**வருடாந்த**
**இல்ல மெய்வல்லுநர் போட்டி**

காலம்: 02-07-1993 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-45 மணி

முதன்மை விருந்தினர்:
திரு. அ. கருணாகரர் அவர்கள்
(முன்னாள் பிரதி அதிபர்)

பரிசில் வழங்குநர்:
திருமதி கமலாம்பிகை கருணாகரர் அவர்கள்

பெற்றார், பழையமாணவர், நலன்விரும்பிகள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
28-6-1993

(சி/6921)

அதிபர்,
ஆசிரியர், மாணவர்கள்.



## அறிவித்தல்

**நாவலர் கல்வி நிறுவனம்**
[சித்தன்கேணி, பண்டத்தரிப்பு]

எமது கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலும்போது இடம் பெயர்ந்த மாணவர்கள் அனைவரும் 'நவகைடன்ஸ்' அருச்சுனாவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சனி, ஞாயிறு நாட்களில் தொடர்புகொள்ளவும்.

– நிர்வாகி
நாவலர்.

**நவகைடன்ஸ்**
[அருச்சுனாவீதி, ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்]

A/L — கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகளும்

O/L — பகல்நேர, வார இறுதி ஆண்டு 9, 10வகுப்புகளும்

03 . 07 . 93இல் ஆரம்பமாகின்றன.

(சி-6919)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


றுள்ளனர்.

மீதமுள்ள 50பேரில் நாளை ஒன்பதுபேர் திரும்புகின்றனர். இவர்களில் இருவர் விடுதலையாகிச் செல்லும் நோயுற்ற பொலிசாரின் பெற்றோர்கள் ஆகும். மிகுதி ஏழுபேரும் காவலிலுள்ள பொலிசாரின் உறவினர்களாகும்.

வலிவடக்குப்

நிலைகளிலிருந்து ஐம்பது கலிபர் தாக்குதலும் நடாத்தப்பட்டது. இதனால் சேதமெதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை.

இதேவேளை நேற்று அதிகாலையிலிருந்து சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தியொன்று வலி-வடக்கின் இராணுவ நிலைகளை அண்டிய பகுதிகள்மீது பல தடவை நோட்டமிட்டுச்சென்றது. இதேவேளை நேற்று முன்தினமிரவு 12 மணியளவிலும், நேற்று அதிகாலையிலும் மாதகல், பொன்னாலைப் பகுதிகளில் பலத்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், எறிகணைத் தாக்குதல்களும் இடம்பெற்றன. நேற்றுமாலை 3-00 மணியளவிலும் மேற்படி பகுதிகளிலிருந்து பலத்த எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. (9) (11

படக்கூடியதாக தென்னிலங்கைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை இனம்காணும் நடவடிக்கையில் சட்டமா அதிபர் திணைக்களம் ஈடுபட்டு வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னர் இவ்வாறு பரிமாற்றம் செய்யப்படக்கூடிய 60 தமிழ்க் கைதிகளின் பெயர்கள் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் ஆனால் அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கைதிகள் தொடர்பாக புலிகள் திருப்தி கொள்ளவில்லை எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சிறிலங்கா பாதுகாப்புஅமைச்சு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்கிய ஆலோசனைக்கு ஏற்ப தென்னிலங்கை தடுப்பு முகாம்களில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்

## மாதாந்த கலை நிகழ்ச்சி

கோண்டாவில் மாவட்டச் செயலக மாவீரர் கலையரங்கில் இன்று மாலை 7.30 மணிக்கு மாதாந்த கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதாக யாழ் மாவட்ட கலை. பண்பாட்டுக் கழகத்தினர் அறியத் தருகின்றனர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும்

குடும்பத்

பெறப்படும் வட்டிப் பணத்திலிருந்தே மேற்படி புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. குடும்பத்தின மூல உழைப்பாளியை இழந்து பரிதவிக்கும் ஏழைத் தமிழ்மாணவர்களுக்கு அவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தாமல் தொடருவதற்காகவே இவ் உதவி வழங்கப்படவுள்ளது.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஸ்தாபகர் அமரர் கே. கந்தசாமி சிட்னி. தமிழ் மனித உரிமைகள் கழகத்தின் ஸ்தாபகரும் அவுஸ்திரேலியா இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஆரம்பகால உறுப்பினருமான அமரர் டாக்டர் இராசநாயகம் ஆகியோரின் ஞாபகார்த்தமாகவே இந்த புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந் நிதியத்தினால் உதவி பெறும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை அவதானித்து காலாண்டுக்கு ஒருமுறை அறிக்கைகளை பெறுவதற்காக தமிழ் மாவட்டங்களில் கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டு உள்ளனர். குறிப்பிட்ட கல்வி முன்னேற்ற அறிக்கைகள் இம் மாணவர்களின் பாடசாலை அதிபர்களின் மூலம் பெறப்பட்டு உதவும் அன்பர்களுக்கு வழங்கப்படுகிறது.

குறித்தும் இப்போது ஆராயப்பட்டு வருவதாகவும், இது தொடர்பான விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் அச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

ஐ. நா.

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் சமர்ப்பித்த யோசனைகளில் உள்ள சிக்கலான அம்சங்கள் குறித்து புலிகளின் பிரதிநிதிகள் ஐ.நா. பிரதிநிதிகளுக்கு விளக்கினர். புலிகளின்யோசனை அடங்கிய அதிகாரபூர்வ அறிக்கை அடுத்த வாரம் ஐ நா. அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாளை காலை ஐ. நா. அதிகாரிகள் புலிகளின் பாதுகாப்புடன் கேரதீவுபாதையையும் பார்வையிடுவர்.

முகாம்களிலிருந்து கிளாலி கரையோரப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)(86)

பதுங்கியிருந்து

ந்து வந்துகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவரும், ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

லெப்டினன்ட் நிசார்/அமுதப்பிரியன் (சதாசிவம் விஸ்வலிங்கம், திக்கோடை மட்டக்களப்பு) எனும் போராளியே இதில் வீரச்சாவு அடைந்தவராவார்.

இவ்இரு போராளிகளுக்கும் ஆதரவாளருக்கும் தமிழீ விடுதலைப் புலிகள் தம வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.


**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)

**தெய்வேந்திரா** (சாவகச்சேரி)

திரையரங்குகளில்




தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30மணி, மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6867)



## விண்ணக வாழ்வில் 31-ம் நாள் நினைவு

மலர்வு:
10
—
12
—
1947



உதிர்வு:
01
—
06
—
1993

அமரர்
**திரு. கிளேற்றன் நல்லையா**
(உரிமையாளர்: ஒளி இல்லம் BRIGHT HOUSE)

"நித்திய அமைதியில் சேர்ந்திடுவாய்
நீடித்த ஒளியில் வாழ்ந்திடுவாய்.
ஆண்டவர் எமையும் அழைக்கும் கால்
அவரோடுன்னையும் சந்திடபோம்"

இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக 01-07-93 வியாழக்கிழமை காலை 6 15 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் துயருறும்
– குடும்பத்தினர்.

## நன்றி நவில்கின்றோம்

கடந்த 01-06-93 அன்று சடுதியாக எமைப் பிரிந்த எங்கள் அன்புத் தந்தை கிளேற்றன் நல்லையா அவர்களின் இழப்பால் நாம்துயருற்றிருந்த வேளையில் எங்கள் துக்கத்தில் பங்கேற்று எமக்கு ஆறுதல் அளித்ததுடன் சகல வழிகளிலும் எமக்கு உதவிகள் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றிகள் பல!

16, றக்கா லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(5244)

– பிள்ளைகள்.